UNIVERSITY OF PERADENIYA

பேராதனைப் பல்கலைக்கழகம்

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

தொடர் தொலைக்கல்வி நிலையம்

දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2015

பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2015 ஆகஸ்ட்

# HINDU CULTURE-I / இந்துப்பண்பாடு-I (HCG-I)

## இந்து சமய வரலாறு - இந்தியா, இலங்கை

## History of Hinduism – India and Sri Lanka

(மூன்று மணித்தியாலம்)

---

இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

01. இந்துசமய வளர்ச்சியில் அதர்வவேதங்கள் பெறும் முக்கியத்துவம் பற்றி விளக்குக.

02. "குப்தர் காலம் இந்துசமயம் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி பெற்ற காலமாகும்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

03. தமிழகத்தில் பல்லவராட்சிக் காலத்தில் வைணவ மதம் பெற்றிருந்த செல்வாக்கினை ஆதாரங்களுடன் விளக்குக.

04. 'சோழ அரசு' இந்துமத அரசாக நிலை பெற்றவாற்றை விளக்குக.

05. சைவசமய வளர்ச்சியில் விவேகானந்தர் ஆற்றிய பணிகளை மதிப்பிடுக.

06. இலங்கையில் அநுராதபுர காலத்தில் இந்துமதம் நிலவியவாற்றை ஆதாரங்களுடன் விபரிக்குக.

07. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்து இந்துசமய வளர்ச்சி பற்றி கட்டுரை ஒன்று வரைக.

08. பின்வருவனவற்றுள் இரண்டினுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.

i. திரு மறைக்காடு
ii. தயானந்த சரசுவதி
iii. கதிர்காமம்
iv. தலபுராணங்கள்

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - APRIL 2014
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2014 ஏப்ரல்

# HINDU CULTURE II / இந்துப்பண்பாடு –II (HCG –II )

## இந்து தத்துவ சிந்தனைகள்

## Hindu Religious and Philosophic Thoughts

இவ்வினாத்தாளில் எல்லாமாக எட்டு (08) வினாக்கள் உள்ளன

எவையேனும் **ஐந்து** (05) வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

**(மூன்று மணித்தியாலம்)**

---

01. "இந்து தத்துவத்தின் தோற்றத்திற்கான ஆரம்ப இழைகளை வேத இலக்கியங்களில் கண்டு கொள்ளலாம்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

02. 'உபநிடதங்கள் பசுக்கள், பால்கறப்பவன் கண்ணன், அருச்சுனன் பசுக்கன்று, அருந்துவோர் பேறறிவாளர், கீதை மேன்மை மிக்கபால்' - உபநிடதங்களிலிருந்து பகவத்கீதையின் உருவாக்கம் பற்றி ஆதாரங்களுடன் விளக்குக.

03. வைசேடிக தரிசனத்தின் அடிப்படைக் கருத்துக்களை பின்வரும் தலைப்புகளில் விபரிக்குக.

(அ) அணுக்கொள்கை (Theory of Atom)

(ஆ) பதார்த்தக் கொள்கை (Theory of Substance)

04. ‘சங்கரரின் அத்வைத வேதாந்தத்தினை முழுமையாக மறுதலிக்கும் நோக்கில் தோற்றம் பெற்றதே மத்துவரின் துவைத வேதாந்தமாகும் - இக்கூற்றை அவதானமாகப் பரிசீலனை செய்க.

05. காரண காரிய சம்பந்தம் தொடர்பாக முன்வைக்கப்படும் மேல் வரும் கோட்பாடுகளை விளக்குக.

(அ) சற்காரிய வாதம்

(ஆ) பிரம்ம பரிணாம வாதம்

(இ) சுத்த மாயா பரிணாம வாதம்

06. ‘ஆகமத்தின் சாரம் சைவசித்தாந்தம்’ இக்கூற்றின் பொருத்தப்பாட்டை எடுத்துக்காட்டுகளுடன் பரிசீலனை செய்க.

07. மேல்வரும் சைவ அறிஞர்களுள் யாரேனும் இருவர் ஈழத்தில் சைவ சித்தாந்த தத்துவத்திற்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) ஆறுமுகநாவலர்

(ஆ) சுவாமி ஞானப்பிரகாசர்

(இ) சைவப் புலவர் கா. அருணாசல தேசிகர்

(ஈ) காசிவாசி செந்திநாதையர்

08. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினுக்குச் சிறு குறிப்பு எழுதுக.

(அ) சாங்கியத்தில் பிரகிருதி

(ஆ) மாண்டூக்கிய காரிகை

(இ) மெய்கண்டார்

(ஈ) தர்ம பூத ஞானம்

(உ) திருவாசகத்தில் சைவசித்தாந்தம்

UNIVERSITY OF PERADENIYA

பேராதனைப் பல்கலைக்கழகம்

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

தொடர் தொலைக்கல்வி நிலையம்

දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2015

பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2015 ஆகஸ்ட்

**HINDU CULTURE - III / இந்துப்பண்பாடு - III (HCG III)**

**இந்துக்கலை, கட்டடக்கலை வரலாறு**

**(History of Hindu Art and Architecture)**

இவ்வினாத்தாளில் எல்லாமாக 09 வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலுமிருந்தும் ஒவ்வொரு வினாவையேனும் தெரிவு செய்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

(மூன்று மணித்தியாலம்)

---

## பகுதி I

01. "இந்துக் கட்டடக்கலை மரபில் கலிங்கத்துக் கோயில்கள் தனித்துவமான அமைப்பினைக் கொண்டவையாகும்." ஆராய்க.

02. தமிழ்நாட்டுக் குடைவரைக் கோயில்களின் வளர்ச்சி பற்றி ஒரு சிறப்புக் கட்டுரை வரைக.

03. "இலங்கையில் திராவிடக் கட்டடக்கலைக்கு இலக்கணமாகத் திகழ்வது வானவன் மாதேவி ஈஸ்வரமாகும்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

## பகுதி II

04. "தமிழகச் சிற்பக்கலை வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தியவர்கள் பல்லவ மன்னர்களேயாவர்." அலசுக.

05. அநுராதபுர காலத்திற்கு உரியனவாகக் கண்டெடுக்கப்பட்ட சைவசமயம் சார்ந்த விக்கிரகங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினைத் தெரிந்து கலாவிமர்சனம் செய்க.

06. இந்துப்பண்பாட்டு வரலாற்றில் இராஜபுத்ர ஓவியங்களின் சிறப்பம்சங்களை விபரிக்குக.

## பகுதி III

07. பின்வருவோருள் யாரேனும் ஒருவர் இசை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

அ. திருஞானசம்பந்தர்

ஆ. சிவயோக சுவாமிகள்

இ. கோபாலகிருஷ்ண பாரதியார்

ஈ. முத்துத்தாண்டவர்

08. இந்துசமய நடனமரபில் கிராமிய நடனங்கள் பெறும் முக்கியத்துவத்தினை விபரிக்குக.

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.

01. போதிகை
02. தேர்ச்சிற்பங்கள்
03. சித்தன்னவாசல் ஓவியங்கள்
04. பஞ்சமரபு
05. தேவரடியார்